**STARTING TIME 12.03 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 54/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assisatant of this court, on 23.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **அல்லிராணி** Husband's Name : **உமாபதி**

Address : கதவு எண். 1/38, பெரியதெரு, ரெட்டிவலம் கிராமம்,
நெமிலி வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 69

**3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. இவ்வழக்கின் 3–ம் பிரதிவாதி பிரகாஷ் எனது இளைய மகன் என்றால், சரிதான். இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளது என்றால், எனது மூத்த மகன் சீனிவாசன் தாக்கல் செய்துள்ளார். 2–ம் பிரதிவாதி பாலாஜி எனது இரண்டு மகன் என்றால், சரிதான். அவர்கள் மூவரை தவிர எனக்கு வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்றால், சரிதான்.

2. வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால், தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் நான் எனது பதிலுரையை தனியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். எனது பதிலுரையில் என்ன சொல்லியுள்ளேன் என தெரியுமா என்றால், தெரியும். நான் என்ன படித்துள்ளேன் என்றால், 2–ம் வகுப்பு வரை தான் படித்துள்ளேன். எழுத,

படிக்க தெரியுமா என்றால், தெரியாது, கையெழுத்து மட்டும் தான் செய்வேன். எனக்கு தவறான ஆவணங்களில் கையெழுத்து செய்யும் பழக்கம் உள்ளதா என்றால், இல்லை.

3. தாவா சொத்துக்கள் எந்த ஊரில் உள்ளது என்றால், ரெட்டிவலம் கிராமத்தில் உள்ள சொத்து குறித்து மட்டும் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து விவரத்தில் மொத்தம் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால், அது பற்றி தெரியவில்லை, மொத்தம் 4 ஏக்கர் ஆகும். மாகானிப்பட்டு சொத்தை பற்றி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால், அது பற்றி தெரியாது.

4. ரெட்டிவலம் கிராமத்தில் உள்ள சொத்துக்கள் எனது தகப்பனாரான எத்திராஜ் முதலியாருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்றால், சரிதான். தாவாவில் உள்ள பி–அட்டவணை சொத்துக்களை பொறுத்து என் தகப்பனார் முதலில் என் பெயரில் 20.10.2004 அன்று ஒரு உயில் சாசனம் எழுதி பதிவு செய்து வைத்தார் என்றால், சரிதான். அதே சொத்தை பொறுத்து தான் என் தகப்பனார் என் பெயருக்கு கடந்த 03.12.2008 அன்று கிரையப் பதிவு செய்துக் கொடுத்தார் என்றால், சரிதான். கிரையம் செய்துக் கொடுத்த போது சொத்துக்கள் சுவாதீனத்தையும் என் தகப்பனார் என் வசம் ஒப்படைத்தார் என்றால், சரிதான்.

5. என் தகப்பனாரிடமிருந்து 03.12.2008 அன்று கிரையம் பெற்ற தாவா பி–அட்டவணை சொத்துக்களை நான் என் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்தேன் என்றால், சரிதான். அதன் பின்னிட்டு அந்த சொத்துக்களை நான் கடந்த 21.06.2011 அன்று 3–ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால், கையெழுத்து மட்டும் தான் செய்தேன், மற்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. அந்த செட்டில்மெண்ட் பத்திரம் காவேரிப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துக் கொடுக்கப்பட்டது

என்றால், சரிதான்.

6. அந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்யப்பட்ட போது சாட்சிகளும் கையெழுத்து செய்தார்கள் என்றால், சரிதான், ஆனால் எதற்காக கையெழுத்து செய்தேன் என்று தெரியாது. செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய போது, எனது தகப்பனாரிடமிருந்து கிரையம் பெற்ற அசல் கிரையப் பத்திரத்தை ஆவண எழுத்தரிடம் கொடுத்து, அதை பார்த்து தான் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

7. செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்யும் சமயத்தில் ஆவணத்தில் என்ன விவரம் உள்ளது என படித்து காட்ட வேண்டும் என்று சார் பதிவாளரிடம் கேட்டேனா என்றால், கேட்கவில்லை. நான் கையெழுத்து செய்த ஆவணம் என்ன ஆவணம் என்று ஆவண எழுத்தரிடமோ அல்லது சாட்சிகளிடமோ அதன் பிறகு கேட்டு தெரிந்துக் கொண்டேனா என்றால், இல்லை.

8. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு சரி என்று சொல்கிறார். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய அன்று நானும், 3–ம் பிரதிவாதியும் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தோம் என்றால், சரிதான். அவர் தான் என்னை சவரட்சனை செய்து வந்தார் என்றால், சரிதான், ஆனால் அவருக்கு திருமணம் ஆவதற்கு 1 மாதம் முன்பே என்னிடமிருந்து பிரிந்து சென்றுவிட்டார்.

9. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய பிறகு எவ்வளவு காலத்திற்கு பிறகு 3–ம் பிரதிவாதிக்கு திருமணமானது என்றால், அது பற்றி தெரியவில்லை. 31.08.2017 அன்று தான் 3–ம் பிரதிவாதிக்கு திருமணமானது என்றால், சரிதான். 3–ம் பிரதிவாதி என்னுடன் வசித்து வந்த போது தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்தும், பால் வேன் வாங்கி ஓட்டி வந்தார் என்றால், சரிதான்.

10. என் கணவர் காலமான பிறகு தான் என் மகன்களுக்கு திருமணமானது

என்றால், சரிதான். வாதி சீனிவாசனுக்கு திருமணமான பிறகு தாவா எ–அட்டவணை சொத்துக்களை பயிர் செய்து வருமாறு ஒப்படைத்தோம் என்றால், திருமணத்திற்கு முன்பே அந்த நிலங்களை பயிர் செய்யுமாறு அவரிடம் ஒப்படைத்தோம். வாதிக்கும், இரண்டாம் பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்ற போது 3–ம் பிரதிவாதியும் உடனிருந்து செலவு செய்தார் என்றால், உடனிருந்தார், ஆனால் செலவு செய்யவில்லை.

11. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் என் கணவர் விபத்தில் காலமானதால் இழப்பீட்டு தொகை வந்தது என்பதை தான் சொல்லியுள்ளேனே தவிர, எந்த தேதியில், யார், யாருக்கு எவ்வளவு தொகை வந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

12. தாவா எ–அட்டவணை சொத்திலிருந்து எவ்வளவு வருமானம் வந்தது, அதில் வாதி சீனிவாசன் எவ்வளவு தொகையை என்னிடம் கொடுத்தார் என்ற விவரங்களை எனது பதிலுரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். தாவா பி–அட்டவணை சொத்துக்கள் எனது தனிப்பட்ட கிரைய சொத்துக்கள் என்பதால் தான் அந்த சொத்துக்களை பொறுத்து 3–ம் பிரதிவாதி பெயருக்கு வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தை எனது சுய விருப்பத்தின் பேரில் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல.

13. 2011–ம் ஆண்டு முதல் 2017–ம் ஆண்டு 3–ம் பிரதிவாதிக்கு திருமணமாகும் வரை என்னுடன் வசித்து வந்த சமயத்திலும், அதன் பின்பும், தாவா பி–அட்டவணை சொத்துக்களுக்கு 3–ம் பிரதிவாதி அவர் பெயரில் தனிப்பட்டா பெற்று, இன்று வரை அனுபவித்து வருகின்றார் என்றால், சரிதான். 3–ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் பத்திரத்தை ஏமாற்றி எழுதி வாங்கிக் கொண்டார் என்று சொல்வதால், 2017–ம் ஆண்டு 3–ம் பிரதிவாதி என்னிடமிருந்து பிரிந்து சென்ற பிறகு அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய சட்டப்படியான

நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால், 3–ம் பிரதிவாதி திருமணத்திற்கு முன்பே எனது மூத்த மகன் சீனிவாசன் இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டார், நான் தனியே நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

14. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில், வருமான வரி துறை சம்மந்தமான பிரச்சனையின் காரணமாக செட்டில்மெண்ட் பத்திரத்தை தன் பெயரில் எழுதிக் கொடுக்க வேண்டும் என 3–ம் பிரதிவாதி சொன்ன காரணத்தினால் தான் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அதுபோல் பிரச்சனையின் காரணமாக நான் செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக் கொடுத்ததாக சொல்வது தவறு என்றும், 3–ம் பிரதிவாதியின் மீது எனக்கு இருந்த பாசத்தின் காரணமாகவே செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன சங்கதிகள் உள்ளது என தெரியாமல் கையெழுத்து செய்துவிட்டேன் என வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

15. செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வைத்த அன்றே அசல் பத்திரத்தையும், எனது தகப்பனாரிடமிருந்து கிரையம் பெற்ற கிரையப் பத்திரத்தின் அசலையும் 3–ம் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டேன் என்றால், சரியல்ல, இரண்டு பத்திரங்களையும் நான் என் வீட்டில் இருந்த பீரோவில் தான் வைத்திருந்தேன். அதன் பிறகு அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் வாதியிடம் கொடுத்து இவ்வழக்கை தாக்கல் செய்ய சொன்னேன் என்றால், சரிதான். எனது தகப்பனாரிடமிருந்து கிரையம் பெற்ற கிரையப் பத்திரத்தின் அசல் 3–ம் பிரதிவாதியிடம் தான் உள்ளது என்றால், சரிதான்.

16. 3–ம் பிரதிவாதி என்னை சவரட்சனை செய்யவில்லை என வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. இன்று வரை அவர் என்னை பார்த்துக் கொண்டு வருகிறார் என்றால், சரியல்ல. 3–ம் பிரதிவாதியின்

குடும்ப அட்டையில் தான் என் பெயர் இன்று வரை உள்ளது என்றால், சரியல்ல, அவர் தனியே சென்றுவிட்டதால் என் பெயரில் நான் தனி அட்டை பெற்றுள்ளேன்.

17. தாவா பி–அட்டவணை சொத்துக்களை வாதி மற்றும் 1 முதல் 3 வரை பிரதிவாதிகள் அனைவரும் கூட்டாக அனுபவித்து வருவதாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா பி–அட்டவணை சொத்துக்களை பங்கு கொடுக்க 3–ம் பிரதிவாதி ஒப்புக் கொண்டதாக சொல்வதற்கு எழுத்து மூலமான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால், இல்லை. 3–ம் பிரதிவாதி என்னை ஏமாற்றி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டதாக சொல்வது பொய் என்றும், வாதியின் தூண்டுதலின் பேரில் நான் அதுபோல் பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

18. தாவா பி–அட்டவணையின் சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்களோ அல்லது கூட்டுக் குடும்ப வருவாயில் இருந்து வாங்கப்பட்ட சொத்துக்களோ அல்ல என்றும், அச்சொத்துக்கள் எனது தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் தான் அவைகளை பொறுத்து 3–ம் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றும், எனவே, அந்த சொத்துக்களில் வாதிக்கோ, 1, 2 பிரதிவாதிகளுக்கோ பாகம் கேட்கும் உரிமை இல்லை என்றால், சரியல்ல.

19. தாவா எ–அட்டவணை சொத்துக்களின் பேரில் கனரா வங்கியில் கடன் வாங்கி டிராக்டர் வாங்கினோம் என்றால், சரிதான். ஒரு பகுதி சொத்தை விற்பனை செய்தும், 3–ம் பிரதிவாதி கொடுத்த பணத்தை கொண்டும் அந்த கடனை அடைத்தோம் என்றால், சொத்தை விற்பனை செய்த பணத்தைக் கொண்டு தான் கடனை அடைத்தோம், 3–ம் பிரதிவாதி எந்த பணமும் கொடுக்கவில்லை.

20. துரைபெரும்பாக்கம் கிராமத்தில் எனது கணவருக்கும் உரிமை உள்ள சொத்து உள்ளது என்றால், எனது சின்னமாமனாரும், பெரியமாமனாரும் பாகம்

பிரித்துக் கொள்ளவே இல்லை, அதனால் என் கணவருக்கு அங்கு பாகம் ஒதுக்கவில்லை. துரைபெரும்பாக்கம் கிராமத்தில் எனது கணவருக்கும் உரிமை உள்ள சொத்துக்கள் உள்ளது என்றும், அந்த சொத்துக்களுக்கான பட்டாவும் என் பெயரில் உள்ளது என்றும், அந்த சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என 3-ம் பிரதிவாதியின் பதிலுரையில் சொல்லியும் அவைகளை சேர்க்கவில்லை என்றால், சரியல்ல.

21. தாவா எ-அட்டவணை சொத்துக்கள் மட்டும் தான் பாகம் பிரிக்க வேண்டிய சொத்துக்கள் என்றும், பி-அட்டவணை சொத்துக்களை பொறுத்து நான் 3-ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துவிட்டதால் அவைகளை பாகம் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால், சரியல்ல. எனது பதிலுரையில் சொல்லாத விவரங்களையும் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால் அவைகளை சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

22. என் மாமனார் மற்றும் கணவருக்கு பாத்தியப்பட்ட வீடு மற்றும் வீட்டு மனைகள் உள்ளது என்றால், சரிதான். அவைகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால், சரிதான்.

3-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

1-ம் பிரதிவாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

**ENDING TIME 01.15. P.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.01.23 14:42:12 +0530